The Hindu (English)
Dated: 28.02.2024

# Campaign to boost first-time voter participation launched

The Education Ministry and the Information and Broadcasting Ministry on Tuesday jointly launched a nationwide awareness campaign "Mera pehla vote desh ke liye (my first vote for the country)", under which various events will be organised in universities, colleges, and higher education institutions to encourage the first-time voters to participate in the upcoming election. "Prime Minister Narendra Modi has today issued a clarion call towards making the electoral process more participative and invited people from all walks of life to spread the message of "Mera pehla vote desh ke liye" campaign in their own style among first-time voters. The Prime Minister shared his message via a post on X," said a Press Information Bureau release.

Dt.Next, Dated: 28.02.2024

## CAA rules likely before MCC comes into effect

NEW DELHI: The rules for the implementation of the contentious Citizenship Amendment Act, 2019 (CAA), for fast-tracking citizenship to undocumented non-Muslim migrants from Pakistan, Bangladesh and Afghanistan are likely to be issued before the Model Code of Conduct for the Lok Sabha elections comes into effect, said sources. The Model Code of Conduct (MCC) gets enforced immediately after the schedule is announced, which is likely in next fortnight. ▸ More on P7

# CAA rules to be unveiled before poll code

**NEW DELHI: The rules for the implementation of the contentious Citizenship Amendment Act, 2019 (CAA) for fast-tracking citizenship to undocumented non-Muslim migrants from Pakistan, Bangladesh and Afghanistan are likely to be issued before the Model Code of Conduct for the 2024 Lok Sabha elections comes into effect.**

The Model Code of Conduct (MCC) gets enforced immediately after election schedule is announced, which is likely in next fortnight. The rules for the CAA is likely to be issued before the MCC comes into effect, sources privy to the development said.

When the rules for the CAA are issued, the Modi government will start granting Indian citizenship to persecuted non-Muslim migrants -- Hindus, Sikhs, Jains, Buddhists, Parsis and Christians -- from Bangladesh, Pakistan and Afghanistan who had come to India till December 31, 2014.

The CAA was passed in December 2019 and it got president's assent subsequently.

However, the law could not be implemented so far as rules are a must for its implementation. There were massive protests in some parts of the country after the CAA was passed by Parliament.

**Union Home Minister Amit Shah earlier said that no one can stop the implementation of the CAA as it is the law of the land**

Over a hundred people lost their lives during the protests or police action.

The Ministry of Home Affairs has readied a portal for the convenience of the applicants as the entire process will be online.

The applicants will have to declare the year when they entered India without travel documents. No document will be sought from the applicants, an official said.

According to the law, the benefits under the CAA will be given to the undocumented minorities from the three neighbouring countries.

Union Home Minister Amit Shah earlier said that no one can stop the implementation of the CAA as it is the law of the land.

The Hindu (Tamil)

Dated: 28.02.2024

# ஆதார் அட்டை முடக்கப்பட்டாலும் தேர்தலில் வாக்களிக்க முடியும்

முடக்கப்பட்ட ஆதார் அட்டைகளால் ஒருவர் வாக்களிப்பதை யாராலும் தடுக்க முடியாது என்று திரிணமூல் காங்கிரஸ் கட்சி பிரிதிநிதிகள் குழுவுக்கு தலைமைத் தேர்தல் ஆணையம் பதில் அளித்துள்ளது. அவர்களிடம் ஆதார் அட்டைகள் இல்லாதபோது வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை காண்பித்து வாக்களிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் ஏராளமான வாக்காளர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அவர்களால் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறி 5 பேர் கொண்ட திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் குழு டெல்லியில் தேர்தல் ஆணைய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியது.

இந்தக் குழுவுக்கு திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை எம்.பி. சுகேந்து சேகர் ராய் தலைமை வகித்தார். அவர் தலைமையிலான குழு, தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் அருண் கோயல் ஆகியோரைச் சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கியது.

மேற்கு வங்கத்தில் ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டுள்ளன என்றும், மேலும் வாக்காளர் பட்டியலில் இருந்து ஏராளமான நபர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்றும் அதில் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து சுகேந்து சேகர் ராய் கூறும்போது, “இன்று மட்டும் 500 வாக்காளர்களின் ஆதார் எண்கள் மேற்கு வங்கத்தில் முடக்கப்பட்டுள்ளன. இது சட்டவிரோதமாகும். இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும். இது தொடர்பான விசாரணையை தேர்தல் ஆணையம் நடத்தவேண்டும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து முடக்கப்பட்ட ஆதார் எண்கள் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரிணமூல் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவிடம் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் உறுதி அளித்தார். மேலும் முடக்கப்பட்ட ஆதார் அட்டைகளால் ஒருவர் வாக்களிப்பதை யாராலும் தடுக்க முடியாது என்றும், அவர்கள் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காண்பித்து தேர்தலின்போது வாக்களிக்கலாம் என்றும் ராஜீவ் குமார் தெரிவித்தார்.



ராஜீவ் குமார்

**திரிணமூல் காங்கிரஸுக்கு தேர்தல் ஆணையம் பதில்**

(1) The Hon'ble CEC answered to Trinamool congress party that even if Aadhaar card is disabled, the voter can caste their vote by submitting alternative documents.

Daily Thanthi

Dated: 28.02.2024

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி காலியா?

# சரியான நேரத்தில் அறிவிப்பு வெளியாகும்

## சபாநாயகர் அப்பாவு தகவல்

சென்னை, பிப்.28-

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி காலியாக இருக்கிறதா என சரியான நேரத்தில் அறிவிப்பு வெளியாகும் என சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

### கருத்தரங்கம்

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை மாநில கல்லூரியில் நேற்று, 'சட்டமன்ற நாயகர் கலைஞர்' என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் மற்றும் மாணவர்களுக்கான பேச்சு போட்டி நடந்தது. நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு தலைமை தாங்கினார். மாநில கல்லூரி முதல்வர் ராமன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில், சபாநாயகர் அப்பாவு பேசியதாவது:-

### செம்மொழி அந்தஸ்து

கருணாநிதி தனது 14-வது வயதில் பொதுவாழ்வுக்கு வந்தவர். உலகில் தோன்றிய முதல் 3 மொழிகளில் இன்றும் உயிரோடு வாழ்ந்துகொண்டிருக்கும் மொழி தமிழ் மொழி. தமிழ் மொழி குறித்து பல கட்டுரைகளை கலைஞர் எழுதியுள்ளார். இந்தியாவிலேயே செம்மொழி அந்தஸ்தை பெற்ற முதல் மொழி தமிழ். உலகம் முழுவதும் உள்ள தமிழ் சொந்தங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் முதல்-அமைச்சர் ஈடுபட்டுள்ளார். எங்கேயாவது ஒரு தமிழருக்கு பிரச்சினை ஏற்பட்டால் முதல் ஆளாக ஓடி சென்று உதவுகிறார். 2035-ம் ஆண்டுக்குள் 55 சதவீதம் பேர் பட்டப்படிப்பு படிக்க வேண்டும் என்று பிரதமர் கூறியுள்ளார். ஆனால், தமிழகத்தில் தற்போது 51 சதவீதம் பேர் பட்டம் படித்துவிட்டார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்பது தான் திராவிட மாடல்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, நிருபர்களிடம் அவர் கூறுகையில், 'திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி காலியாக இருக்கிறதா என சரியான நேரத்தில் அறிவிப்பு வெளியாகும். இந்த ஆட்சி சட்டத்தின் ஆட்சி. சட்டத்திற்குட்பட்டு சரியான நடவடிக்கை எடுத்து வருகிறோம்' என்றார்.

கருத்தரங்கில், சட்டப்பேரவை துணை சபாநாயகர் பிச்சாண்டி, அரசு தலைமை கொறடா கோ.வி.செழியன், சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன், முன்னாள் சட்டப்பேரவை செயலாளர் செல்வராஜ், முன்னாள் எம்.எல்.ஏ. ஞானசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

2. Hon'ble Speaker Appavu informed that the Announcement about the vacancy position in Tirukovilur Assembly constituency will be made in due course.

Dinamalar

Dated: 28.02.2024

# துவக்கம்!

## ● இளம் வாக்காளர்களை ஊக்குவிக்க பிரசாரம்...
## ● கல்லூரிகளில் மார்ச் 6 வரை நடக்கிறது

**புதுடில்லி, பிப். 28–**

**லோக்சபா தேர்தலில் முதன்முறை வாக்காளர்கள் தவறாமல் ஓட்டளிப்பதை ஊக்குவிப்பதற்காக, தேசிய அளவிலான பிரசாரத்தை மத்திய அரசு நேற்று துவக்கி உள்ளது. இந்த பிரசாரம், இன்று துவங்கி மார்ச் 6 வரை நடக்கிறது.**

லோக்சபா தேர்தல், வரும் ஏப்ரல் – மே மாதங்களில் நடக்கவுள்ளது. இதில், 18 – 19 வயது வரையிலான 1.85 கோடி புதிய வாக்காளர்கள் முதன்முறை ஓட்டளிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களிடம் ஓட்டளிக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பிரசாரத்தை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டது. இதற்காக, 'நாட்டிற்கான என் முதல் ஓட்டு' என்ற பிரசாரத்தை மத்திய அரசு நேற்று துவங்கியது.

### விழிப்புணர்வு

தேர்தலில் இளம் வாக்காளர்கள் தவறாமல் ஓட்டளிப்பதை ஊக்குவிப்பதும், அவர்களின் ஒவ்வொரு ஓட்டும் இந்த தேசத்தின் நன்மைக்காக என்ற கருத்தை அவர்கள் மனதில் ஆழமாக பதிய வைப்பதுமே, இந்த பிரசாரத்தின் நோக்கமாக வரையறுக்கப்பட்டு உள்ளது.

இதற்காக பல்கலைகள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் முதன்முறை வாக்காளர் விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

'ப்ளாக் ரைட்டிங்' எனப்படும், வலைப்பதிவு கட்டுரைகள், 'பாட்காஸ்ட்' எனப்படும், 'ஆன்லைன்' ஒலிப்பதிவுகள், விவாதங்கள், கட்டுரை போட்டி, வினாடி வினா, பேச்சுப் போட்டிகள் உள்ளிட்டவை வாயிலாக மாணவர்களின் கற்பனை திறன்களை வெளிக்கொண்டு வந்து, அதன் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதோடு, ஓட்டளிப்பதின் மதிப்பை வலியுறுத்துவது, தேர்தல் நடைமுறைகளை புரிந்து கொள்வது போன்றவற்றுக்காக கல்வி நிறுவனங்களுக்கு உள்ளேயே பட்டறை வகுப்புகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி நிறுவனங்களை சேர்ந்த தேசிய நாட்டு நலப்பணி திட்ட தன்னார்வலர்கள் இந்த பிரசார பணியை முன்னெடுப்பர். இது தொடர்பான தகவல்கள், www.mygov.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளன.

### அழைப்பு

இந்த பிரசாரத்துக்காக எழுதி, இசை அமைக்கப்பட்டுள்ள, 'ஓட்டளிக்கும் போது தான், நாடு மேன்மை அடையும்...' என துவங்கும் பாடலை, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர் மற்றும் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆகியோர் நேற்று வெளியிட்டனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது:

நாட்டின் மிகப் பெரிய ஜனநாயக திருவிழாவுக்கு இந்த தேசமே தயாராகி வருகிறது.

இந்த நேரத்தில், 'நாட்டிற்கான என் முதல் ஓட்டு' என்ற விழிப்புணர்வு பிரசாரத்தில் அனைவரும் பங்கேற்று இளம் தலைமுறை வாக்காளர்கள் ஓட்டளிக்க ஊக்குவிக்க வேண்டும்.

நாட்டில் உள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும், இன்று முதல் மார்ச் 6 வரை இந்த பிரசாரத்தை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 'நம் தேர்தல் நடைமுறையை கூடுதல் பங்கேற்பு உடையதாக மாற்றுவோம். முதன்முறை வாக்காளர்கள் மத்தியில் இந்த செய்தியை பரப்ப அனைத்து தரப்பு மக்களுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்' என, குறிப்பிட்டுள்ளார்.

The Central Government launched a nationalwide campaign to encourage young voters to caste their vote first time in Lok Sabha Election and the campaign will be conducted in Colleges till 6th March, 2024.